பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**01 06 2026** **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** சிவில் விமான போக்குவரத்துத்துறை இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** இந்தியா — ஓமன் இடையேயான ஒருங்கிணைந்த பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் இன்று முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**3.** சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் ஒரு லட்சத்து 94 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளது.

**4.** தென்கொரியாவில் நேரிட்ட தீ விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர், இரண்டு பேர் காயமடைந்தனர்.

**5.** பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — பிரேசிலின் **Marcelo Demoliner** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<>>>>>>

சிவில் விமான போக்குவரத்துத்துறை இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பான கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், விமான பயணம் என்பது அனைவருக்குமானதாகவும், எளிதாகவும் உருவெடுத்துள்ளதாக அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Digi** யாத்ரா பயன்பாடு பத்து கோடி பயணங்களை தாண்டியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>>>

ஆஸ்திரேலியா உடனான பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இந்தியா — ஆஸ்திரேலியா பாதுகாப்பு அமைச்சர்களுக்கு இடையே புதுதில்லியில் நடைபெற்ற பேச்சுக்களின்போது இதனை தெரிவித்தார்.

வருங்காலங்களிலும் இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பத்துறை ஒத்துழைப்பு மேம்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் பேசிய ஆஸ்திரேலிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Richard Marles,** குறிப்பாக இருநாடுகளுக்கும் இடையே கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு பெருமளவு வளர்ச்சி கண்டுள்ளதாக கூறினார்.

<<<<>>>>>>

இந்தியா — ஓமன் இடையேயான ஒருங்கிணைந்த பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் இன்று முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆறு மாதங்களுக்கு முன்னர் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவிற்கு இந்த ஒப்பந்தம், மேலும் வலுசேர்க்கும் என்றும் அவர் கூறினார்.

இதன்மூலம், சிறு-குறு தொழில்துறையினர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் பயனடைவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>>>

மண்வளம் காப்பது தொடர்பான தேசிய இயக்கம் இன்று தொடங்கியுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேசத்தின் **Raisen** -ல் இன்று இந்த இயக்கத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இம்மாதம் **30**-ஆம் தேதிவரை இந்த இயக்கம் நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த இயக்கத்தின்கீழ், வேளாண் விஞ்ஞானிகள், வேளாண் பல்கலைக்கழகங்களின் நிபுணர்கள், வேளாண் அறிவியல் மையங்களின் அதிகாரிகள் கிராமங்களுக்கு சென்று, விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளதாக அவர் தெரிவித்தார்.

முறையான உரப்பயன்பாடு, மண் பரிசோதனை, மண்வள அட்டை, இயற்கை வேளாண்மை, நீர் சேமிப்பு, அறிவியல் ரீதியான வேளாண் நடைமுறைகள் போன்றவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளதாக அவர் கூறினார்.

மண்வளம் பாதுகாக்கப்பட்டால் வேளாண் வளர்ச்சி சிறப்பாக இருக்கும் என்றும், நாடு வளமடையும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<>>>>>>

யோகாவிற்கு உலக அளவில் வரவேற்பு கிடைத்து வருவதாக மத்திய ஆயுஷ்துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், சர்வதேச யோகா தினம் வரும் **21**-ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளதை சுட்டிக்காட்டினார்.

''ஆரோக்கியமான முதுமைக்கு யோகா'' என்ற மையக்கருத்தோடு இந்த ஆண்டு யோகா தினம் கொண்டாடப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக அளவில் அறிவியல் நிபுணர்களும் யோகாவின் பலன்களை ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு யோகா தொடர்பாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டதாகவும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

<<<<>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் ஒரு லட்சத்து **94** ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது கடந்த ஆண்டு இதேகாலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில் மூன்று புள்ளி இரண்டு சதவீதம் அதிகமாகும் என்று நிதியமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>>>

இளநிலை மருத்துவப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் மறுதேர்வினை கணினி அடிப்படையில் மேற்கொள்ள உத்தரவிட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரித்த நீதிபதிகள் திரு நரசிம்மா, திரு அரவிந்த்குமார் அமர்வு, மறு தேர்வை கணினி முறையில் நடத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாக தெரிவித்தது.

தேர்வை ரத்து செய்ததன் காரணமாக, தேசிய தேர்வு முகமை பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருவதாகவும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

இவ்வழக்கு தொடர்பான விசாரணை அடுத்த மாதம் 27-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை, முப்படைகளின் தளபதி திரு ராஜா சுப்பிரமணி இன்று சந்தித்து பேசினார்.

முப்படை தளபதியாக பொறுப்பெற்ற பின்னர் மரியாதை நிமித்தமாக குடியரசுத் தலைவரை அவர் சந்தித்து பேசியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>>>

அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணனை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

மாநிலத்தின் வளர்ச்சிப்பணிகள் குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனைத்தொடர்ந்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டாவையும், முதலமைச்சர் சந்தித்து பேசினார்.

சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக சமூக வலைதளத்தில் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கூறியுள்ளார்.

<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் அரசு போக்குவரத்துக்கழக பேருந்துகள் அனைத்தும் அடுத்த 21 ஆண்டுகளுக்குள் மின்சார பேருந்துகளாக மாற்றப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர ஃபட்நவிஸ் கூறியுள்ளார்.

இன்று மும்பையில் அரசு போக்குவரத்துக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

அடுத்த மூன்றாண்டுகளுக்குள் 50 சதவீத பேருந்துகளை மின்சார பேருந்துகளாக மாற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக முதலமைச்சர கூறினார்.

<<<<>>>>>>

சிக்கிமில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்து தேர்தல் ஆணையம் ஆய்வு மேற்கொண்டது.

இன்று கேங்டாக்கில், தேர்தல் ஆணையத்தின் இயக்குநர் திருமதி **Shubhra Saxena** தலைமையில் இந்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தகுதியான வாக்காளர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இப்பணிகளில் வெளிப்படைதன்மை உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் திருமதி **Shubhra Saxena** தெரிவித்தார்.

<<<<>>>>>>

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் இரண்டு சட்டப்பேரவை உறுப்பினர்கள் அக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாக திரு **Sandipan Saha,** திரு **Ritabrata Banerjee** ஆகியோர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக அதன் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>>>

தென்கொரியாவில் நேரிட்ட தீ விபத்தில், ஐந்து பேர் உயிரிழந்தனர், இரண்டு பேர் காயமடைந்தனர்.

**Daejeon** நகர் பகுதியில் செயல்பட்டுவரும் விண்வெளி உதிரி பாகங்கள் தொழிற்சாலையில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

தொழிற்சாலையில் தூய்மைப்பணிகளை மேற்கொண்டபோது இந்த விபத்து நேரிட்டதாகவும் அவர்கள் கூறினர்.

இதுகுறித்து முழுமையாக விசாரணை நடத்த அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>>>

இலங்கையில் நேரிட்ட சாலை விபத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர், **13** பேர் காயமடைந்தனர்.

கொழும்பு அருகே திருவிழா கூட்டத்தில் பங்கேற்றவர்கள் மீது லாரி மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

ஓட்டுநர் போதையில் கட்டுப்பாட்டை இழந்து திருவிழாவில் பங்கேற்றவர்கள் மீது மோதியதாக அவர்கள் கூறினர்.

<<<<>>>>>>

எத்தியோப்பியாவில் நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெற்றது.

இந்த தேர்தலில் **47** அரசியல் கட்சிகளின் சார்பில் **10** ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — பிரேசிலின் **Marcelo Demoliner** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை **7-5, 6-4** என்ற செட் கணக்கில், ஜெர்மனியின் **Tim Putz — Kevan Krawietz** இணையை வென்றது.

இப்போட்டியின் ஜூனியர் பிரிவில் இந்தியாவின் **Arnav Vijay Paprkar** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், **6-2, 6-4** என்ற செட் கணக்கில், தைவானின் **Chen Kuan Shou** -வை வென்றார்.

---------------

சீனாவில் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில், பத்து தங்கம் உட்பட 19 பதக்கங்களை வென்ற இந்திய அணிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா ஆகியோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

**<<<<END>>>>>>**